கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

திருவள்ளுவர் ஆண்டு 2054 சோபகிருது வருடம் ஆவணி மாதம் 01–ம் நாள் வெள்ளிக்கிழமை

2023 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**I.A.No. 03 of 2023**
**in**
**O.S. No. 105 of 2021**

முத்துகிருஷ்ணன் . . . மனுதாரர் / வாதி

/எதிர்/

1. தங்கராஜ்

2. ராமசாமி நாடார் . . . எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 03.08.2023 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.P.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. காந்திமதிநாதன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. வடிவேல் அவர்கள் ஆஜராகியும் மனு அனுமதிப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் . . .

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.08.18 17:34:32 +0530

**<u>உத்தரவு</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ளபடி வழக்கில் சீர்திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். அசல் வழக்கானது உறுத்துக்கட்டடளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதி பக்கம் விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கின் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்ய வேண்டி வழக்குரையை பார்த்த போது, ஷை வழக்குரையில் மனுதாரர்/வாதியின் முகவரி மற்றும் 2ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் மற்றும் வழக்குரை 1வது பாராவில் புல எண் மற்றும் வழக்குரை 2வது பாராவில் வாதியாகிய நான் மலேசியா சென்ற வருடம் ஆகியவை வழக்குரையில் தவறுதலாக காட்டப்பட்டுள்ளதால் அதுவகைக்கு அசல் வழக்கினில் திருத்தம் செய்யவேண்டியது அவசியமாய் உள்ளது. மேற்கண்ட திருத்தம் வழக்கிற்கு அவசியமானதாகும். எனவே, பிரதான வழக்கை சீர்திருத்தம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையல்ல. பிரதான வழக்கு வாதியால் 2021ம் ஆண்டு விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம்

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.18 17:34:41 +0530

கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது வாதி பக்கம் விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/வாதி அசல் வழக்கின் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்ய வேண்டி வழக்குரையை படித்து பார்த்த போது, மனுதாரரின் / வாதியின் முகவரி மற்றும் 2ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் மற்றும் வழக்குரை 1வது பாராவில் புல எண் மற்றும் வழக்குரை 2வது பாராவில் மனுதாரர்/வாதி மலேசியா சென்ற வருடம் ஆகியவை தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதால் பிராதை சீர்திருத்தம் செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி 27.02.2022ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், கடந்த 13 மாதங்களுக்கு மேலாக பிராதில் உள்ள தவறுகள் குறித்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு எவ்வித விளக்கமும் தெரிக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் ஒரே முகவரியில் இருந்து கொண்டு வஞ்சகக்கூட்டில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என கூறியுள்ளார் அதனை சரி செய்யும் நோக்கத்தில் மனுதாரர்/வாதி 1வது சீர்திருத்தத்தில் அவரது முகவரியை மாற்றம் செய்ய கோரியுள்ளார். மேலும், கூடுதல் ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். கூடுதல் ஆவணங்களை பிரதான வழக்கு தாக்கல் செய்யும் சமயத்திலோ அல்லது வாதி தரப்பு சாட்சிய விசாரணை சமயத்திலோ தான் தாக்கல் செய்ய முடியுமே தவிர சீர்திருத்த மனு மூலம் தாக்கல் செய்ய முடியாது. எனவே, மனுதாரர் கூறும் காரணம் சட்டப்படி ஏற்க கூடியதல்ல. எனவே, சீர்திருத்தம் விபரம் தவறு என இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.08.18 17:34:49 +0530

மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி அசல் வழக்கின் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்ய வேண்டி வழக்குரையை பார்த்த போது, மனுதாரர்/வாதியின் முகவரி மற்றும் 2ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் மற்றும் வழக்குரை 1வது பாராவில் புல எண் மற்றும் வழக்குரை 2வது பாராவில் மனுதாரர்/வாதி மலேசியா சென்ற வருடம் ஆகியவை வழக்குரையில் தவறுதலாக காட்டப்பட்டுள்ளதால் அதுவகைக்கு அசல் வழக்கினில் திருத்தம் செய்யவேண்டியது அவசியமாய் உள்ளது.  எனவே, பிரதான வழக்கை சீர்திருத்தம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்/வாதி அசல் வழக்கின் முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்ய வேண்டி வழக்குரையை படித்து பார்த்த போது, மனுதாரரின் / வாதியின் முகவரி மற்றும் 2ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் கதவு எண் மற்றும் வழக்குரை 1வது பாராவில் புல எண் மற்றும் வழக்குரை 2வது பாராவில் மனுதாரர்/வாதி மலேசியா சென்ற வருடம் ஆகியவை தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளதால் பிராதை சீர்திருத்தம் செய்ய கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி 27.02.2022ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், கடந்த 13 மாதங்களுக்கு மேலாக பிராதில் உள்ள தவறுகள் குறித்து சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கு எவ்வித விளக்கமும் தெரிக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்த

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.18 17:34:57 +0530

எதிர்வழக்குரையில் மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும் ஒரே முகவரியில் இருந்து கொண்டு வஞ்சகக்கூட்டில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என கூறியுள்ளார் அதனை சரி செய்யும் நோக்கத்தில் மனுதாரர்/வாதி 1வது சீர்திருத்தத்தில் அவரது முகவரியை மாற்றம் செய்ய கோரியுள்ளார். மேலும், கூடுதல் ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். கூடுதல் ஆவணங்களை பிரதான வழக்கு தாக்கல் செய்யும் சமயத்திலோ அல்லது வாதி தரப்பு சாட்சிய விசாரணை சமயத்திலோ தான் தாக்கல் செய்ய முடியுமே தவிர சீர்திருத்த மனு மூலம் தாக்கல் செய்ய முடியாது. எனவே, மனுதாரர் கூறும் காரணம் சட்டப்படி ஏற்க கூடியதல்ல. எனவே, சீர்திருத்தம் விபரம் தவறு என இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வாதுரை செய்யப்பட்டுள்ளது.

4. அசல் வழக்கு விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்தங்களை செய்தால் தான் வழக்கில் தீர்வு காண முடியும் என்பதாலும், மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யப்பட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், அதனால் பல மனுக்கள் தாக்கல் செய்ய நேரிடும்.

சீர்திருத்த விபரங்களில் குறிப்பிட்டுள்ள 5வது சீர்திருத்தமானது

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.18 17:35:09 +0530

ஆவணங்களை குறித்தது ஆகும். மேற்கண்ட ஆவணங்களை மனுதாரர் வழக்கில் விசாரணையின் போது தாக்கல் செய்து கொள்ளலாம். இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படதக்கதாகும். மனு அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்த தீங்கும் ஏற்படாது.

இறுதியாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுவில் குறிப்பிட்டுள்ள 5வது சீர்திருத்தத்தை தவிர பிற 1முதல் 4 சீர்திருத்தங்களை பிராதில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.08.18 17:35:19 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.08.18 17:35:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

------------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
வள்ளியூர்

**I.A.No. 03 of 2023**
**in**
**O.S. No. 105 of 2021**

வரைவு/ சீரான உத்தரவு

நாள் 18.08.2023

------------------------------------